சமூகப்பாதுகாப்புத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. இல. நிர்மல்ராஜ், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர்,<br>மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,<br>15, தெற்கு மடவிளாகம், திருவாரூர் - 610 001.<br>☎ 04366-241299 Email Id: dcpstvr@gmail.com | அனைத்துத்துறை<br>மாவட்ட அலுவலர்கள், |

எண்.1027/மா.கு.பா.அ./2017, நாள் : 07.12.2017

அய்யா/அம்மா,

பொருள் : குழந்தைகள் நலன் - மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, திருவாரூர் மாவட்டம் – தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் - குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் - அறிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை: சென்னை – 10, தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் நேர்முகக் கடித எண்:1499/TNCPCR/2017, நாள்: 30.10.2017.

*******

பார்வையில் காணும் தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவரின் நேர்முகக் கடிதத்தில், சமீபத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற குழந்தை உயிரிழப்பு சம்பவம் எதிர்வரும் காலங்களில் ஏற்படாமல் செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, குழந்தைகள் பாதுகாப்பில் மாவட்ட அளவிலான துறை அலுவலர்கள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்ற அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

- குறை தீர்க்கும் முகாம் மற்றும் நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யப்படும்போது குழந்தைகள் தங்குவதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதை தவறாமல் உறுதி செய்துக்கொள்ள வேண்டும். மேலும், இயன்றவரையில் குழந்தைகளை அழைத்து வருவதை தவிர்க்கும் வகையில் துறை அலுவலர்கள் செயல்படவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். குழந்தைகளுடன் வரும்போது காலதாமதம் இன்றி முன்னுரிமை அளித்து கோரிக்கைகளை விதிமுறைகளுக்குக்குட்பட்டு தீர்வு செய்யப்படவேண்டும்.

* எந்தவொரு நிலையிலும் குழந்தைகளின் இயற்கைக்கு மாறான உயிரிழப்பு நிகழாவண்ணம் செயல்படவும், தேவைப்படும் நிகழ்வுகளில் குழந்தைகளின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்யும் வகையில் நடந்துக்கொள்ள பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுக்கு ஆலோசனைகள் வழங்குவதையும் மாவட்ட நிலையிலான அலுவலர்கள் உறுதி செய்துக் கொள்ளவேண்டும்.

* அனைத்து நிலைகளிலும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்து உறுதி செய்யப்படவேண்டும். குறிப்பாக, மகளிர் சுய உதவிக்குழுக்கள், உள்ளாட்சி நிர்வாக அமைப்பினர், தன்னார்வு தொண்டு நிறுவனத்தினர் மற்றும் கல்லூரி மாணவ / மாணவியர் ஆகியோர்களின் உதவியுடன் குழந்தைகளின் உயிரிழப்பினைத் தவிர்க்கும் வகையில் முனைப்புடன் செயல்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
திருவாரூர்.

7.12.17.